Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY FEBRUARY 28, 2021


திங்கட்கிழமை பெப்ரவரி 28, 2022 | ஒளி: 07 கதிர் 243 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இன்றும் மின்வெட்டு

நாட்டில் இன்றைய (28) தினமும் 5 மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் இன்றைய தினம் மின் வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2





### எனது அரசாங்கத்தின்

# ‘தவறுகள் அல்ல’

**முந்தைய அரசாங்கங்களின் கடனை வட்டியுடன் செலுத்துவதாக ஜனாதிபதி தெரிவிப்பு**

முந்தைய அரசாங்கங்கள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தப் பிரச்சினைகள், தனது அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகளால் ஏற்பட்டவை அல்லவென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டை ஆட்சி செய்யும் போது, பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதி செய்யும் ஜனநாயக முறைமையிலிருந்து விலகப்போவதில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, அதனால் கிடைக்கும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென்று, அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லிம் பெண்கள் ஆவேசம்



பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லிம் பெண்கள் ஆவேசமான முறையில் சில கருத்துக்களை முன்வைத்திருந்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், நேற்று (27) வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



### தரமற்ற விமர்சனங்களால்

## வளர்ந்த என்னை வீழ்த்த முடியாது

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு


மலைவாஞ்ஞன்

இத்தனை வருடங்களாக சிலர் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நாங்கள் முடித்துக் காண்பித்துள்ளோம் என்று தெரிவித்த என தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், அதே நேரம் இன்று பலர் தரமற்ற விமர்சனங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள் எனவும் அதனால் நான் வளர்வேனே தவிர ஒரு போதும் எவரும் என்னை வீழத்த முடியாது என தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையின்

## 49 ஆவது அமர்வு இன்று ஆரம்பம்



ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு, இன்று (28) ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரமும் உள்ளடங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மார்ச் மாதம் 3ஆம் திகதியன்று கவனம் செலுத்தப்படும்.

தொடர்ச்சி P2







## இளைஞர் குழுக்களுக்கு இடையே அடிதடி

### கலவர பூமியானது வைரவ புளியங்குளம்

க. அகரன்

வவுனியாவில் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுடன் வந்த குழுவினருக்கும் பிறிதொரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற மோதலால் வவுனியா வைரவபுளியங்குளம் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பகுதி கலவரபூமியாக காட்சியளித்தது.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் தாக்குதல் தகவல் கிடைக்கவில்லை என

## சிலுவையில் சத்தியம் செய்ய முடியும்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த தமக்கு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எந்த தேவாலயத்திலும் சிலுவையில் வைத்து சத்தியம் செய்ய முடியும் என தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு

## எதிராக மட்டக்களப்பிலும் கையெழுத்து போராட்டம்

வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம்.நூர்தீன், க.விஜயரெத்தினம்

தமிழரசு கட்சியின் வடக்கு, கிழக்கு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் “பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும்” என்ற கோரிக்கையைத் முன்வைத்து நாடு பூராகவும் முன்னெடுத்துவரும் கையெழுத்துப் போராட்டமும் கவன ஈர்ப்பு போராட்டமும் மட்டக்களப்பில் நேற்று (27) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## சுற்றுலா வந்த இருவர் சடலங்களாக மீட்பு

டி.ஷங்கீதன், சந்ரு



திகதி, வருகைத் தந்து விடுதியில் தங்கியிருந்த இருவரும்,

குருநாகல்- கொக்கரல்ல பகுதியிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா வந்த இருவர், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளமை தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

59 வயதான ஆணொருவரும் 57 வயதான பெண்ணொருவருமே அவர்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து நேற்றுமுன்தினம் (26) ச மீட்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் பகுதியில் இருந்து 25ஆம்

தொடர்ச்சி P2



### எல்லை தாண்டி மீன்பிடித்த

## இந்திய மீனவர்கள் 8 பேருக்கு மறியல்

யது பாஸ்கரன்

கிளிநொச்சி இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 08 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் எஸ். சிவசுப்பிரமணியம், நேற்று (27) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

### உக்ரேனிலிருந்து வெளியேற

## 20 இலங்கையர்கள் காத்திருப்பு



உக்ரேனில் சிக்கியுள்ள 20 இலங்கையர்கள், போலந்து எல்லையூடாக உக்ரேனிலிருந்து வெளியேற்றும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாக துருக்கி தலைநகர் அங்காராவிலுள்ள இலங்கை தூதரம் அறிவித்துள்ளது.

உக்ரேனிலிருந்து இலங்கைக்கு திரும்பும் எதிர்பார்ப்புடன் அவர்கள் போலந்து எல்லையில் காத்திருப்பதாக துருக்கி, ஜோர்ஜியா மற்றும் உக்ரேனுக்கான இலங்கை தூதுவர் எம்.ஆர். ஹசன் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

### இலங்கைக்கு வருவோரின்

## தடுப்பூசி முழுமையெனின் பீசிஆர் தேவையில்லை



வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், முழுமையாக கொரோனா தடுப்பூசிகளை பெற்றிருந்தால், எதிர்வரும் மார்ச் 1ஆம் திகதி முதல் பீசிஆர் அல்லது விரைவான அன்டிஜன் பரிசோதனை அறிக்கை பெற வேண்டிய அவசியம் இல்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



### ரஷ்ய தாக்குதலின் 4ஆம் நாளில்

# கார்கிவ் விழுந்தது

கீவ்: உக்ரேன் மீது ரஷ்யா, நேற்று (27) நான்காவது நாளாக தாக்குதல் நடத்தியது. இந்நிலையில், இணைய சேவை, இராணுவ ஆயுதங்கள், நிதியுதவி என உக்ரேனுக்கு உதவிக்கரம் நீண்டுகொண்டே செல்கின்றது.

அதேவேளையில், உக்ரேனின் 2வது பெரிய நகரமான கார்கிவ், ரஷ்யாவின் முழு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. உக்ரேன் இராணுவத்தினர் 471 பேரையும் ரஷ்யப் படைகள் கைது செய்துள்ளது.

நேற்று முன்தின (26) நிலவரப்படி உக்ரேன் நாட்டில் அப்பாவி பொதுமக்கள் 198 பேர் பலியாகியிருந்தனர். 1,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதுவரை 240 அப்பாவி மக்கள் உக்ரேனில் உயிரிழந்திருக்கலாம் எனக் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் கணிக்கிறது.

ரஷ்ய தரப்பில் 3,500 இராணுவ வீரர்களை வீழ்த்தியுள்ளதாக உக்ரேன் ஜனாதிபதி வொலடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

இதற்கிடையில் கார்கிவ் நகருக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்துவிட்டன. இது உக்ரேனின் வடகிழக்குப் பகுதி. இதனை உக்ரேனின் உள்துறை அமைச்சரான ஆன்டன் ஹெராஸ்சென்கோ உறுதிப்படுத்தியுள்ளார். கார்கிவ் நகரில் பல முக்கியமான மருத்துவப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

போர் தொடங்கிய முதல் தாங்கள் தனித்துவிடப்பட்டுள்ளதாக உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வேதனை தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2



# 'தவறுகள் அல்ல'

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, சனிக்கிழமை (26) முற்பகல், எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையானது, இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் கிடைக்கப்பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். முந்தைய அரசாங்கங்கள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள், தனது அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகளால் ஏற்பட்டவை அல்லவென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் சவால்களுக்கு முகங்கொடுக்க, எதிர்க்கட்சிகளும் பொதுமக்களும், அரசாங்கமும் இணைந்துப் பணியாற்ற வேண்டிய தேவையை எடுத்துரைத்த ஜனாதிபதி, இடையூறு விளைவிக்கும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், பொய்ப் பிரசாரங்கள் போன்றவற்றை, எந்தவொரு பொறுப்பான தரப்பிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை என்றார்.

20 வருடங்களாக வாழ்ந்து வந்தும், அந்தக் காணியின் சட்டபூர்வ உரிமையற்றிருக்கும் மகாவலி மக்களுக்கு அந்த உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை அரசாங்கம் என்ற வகையில் உணர முடிகின்றது என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரசாயனப் பசளை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அடுத்து, புரட்சியாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கட்சியினர், விவசாய மக்களை வீதிக்கு இறக்கினர். பயிர்ச் செய்த வயல்களுக்கு தீயிட்டுப் பயிர்களை அழித்துச் செய்த போராட்டங்கள் என்பன, விவசாயி மீதுள்ள அன்பால் செய்யப்பட்டவை அல்லவென்றும் இதன்மூலம் அவர்கள் அரசியல் இலாபம் பெறவே முயற்சித்தனர் என்றும் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்.

காணி உரித்துரிமையை வழங்குவதால் மாத்திரம் மகாவலி விவசாய மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்வை எட்டப்போவதில்லை என்று தெரிவித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தேசத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, அனைத்து விவசாயக் காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது விவசாய மக்களின் கடமையென்றும் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தின் மூன்றாவது தலைமுறையினரை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் பொறுப்பை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கின்றதென்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

மகாவலி வலய விவசாயிகளின் காணிகள் மாத்திரமல்ல, உயிர்களைப் பறிகொடுக்கும் காலத்தை மாற்றியதும் ராஜபக்ஷர்களே என்று குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், வாவிகள், அணைக்கட்டுகளை நிர்மாணித்து மகாவலிக்கு உயிரூட்டி, இரண்டு போகங்கள் மாத்திரமன்றி மூன்றாவது போகமென மேலதிக போகமொன்றைச் செய்வதற்கான வசதிகளை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் குறிப்பிட்டார்

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# இன்றும் மின்வெட்டு

இதற்கமைய, A,B,C ஆகிய வலயங்களுக்கு 4 மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதுடன், P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட இடங்களில், 5 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# நீதியமைச்சர் அலி...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, வடக்கு, கிழக்கு வாலிப முன்னணி தலைவர் கி. சேயோனொருங்கிணைப்பில் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் லோ.தீபாகரன் தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு மறை.மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் இந்து, இஸ்லாமிய மதத்தலைவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்-முஸ்லிம் மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இலங்கை ஆசிரியர் சங்கம், கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இன்றைய இந்த கையெழுத்துப்பெறும் போராட்டத்தில் பெருமளவான முஸ்லிம் பெண்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கியிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தும் போராட்டம் நடைபெற்றதுடன், குறித்த தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லிம் பெண்கள் ஆவேசமான முறையில் சில கருத்துக்களை முன்வைத்திருந்தமையினை அவதானிக்க முடிந்தது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# வளர்ந்த என்னை...

அக்கரபத்தனை பசுமலை நாகசேன வீதியினை இணைக்கும் குறுக்கு வீதியை மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வில் நேற்று (27) கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், "மலையகத்தில் இன்று பலர் பல்வேறு அர்த்தமற்ற விமர்சனங்களை செய்து வருகிறார்கள். ஏதோ பேச வேண்டும் என்பதற்காக செய்யப்படும் விமர்சனங்களுக்கு என்னால் பதிலளித்துக்கொண்டு இருக்க முடியாது.

ஆரம்பத்தில் ஒரு கூட்டம் கூறியது எமது மக்களுக்கு கோதுமை மா தேவையில்லை என்றும் கோதுமை மா வினை வைத்து அரசியல் செய்கின்றோம் என்றும் கூறினார்கள். அதனை தொடர்ந்து விலையினை குறைத்துக் கொடுத்தவுடன் அது தாமதம் என்றார்கள் ஆகவே தரமற்ற விமர்சனங்களுக்கு பதில் சொல்ல தேவையில்லை.

30 வருட போரினை கடந்து நாம் திரும்பி மீண்டு வந்துள்ளோம். ஆகவே இந்த கொரோனா பாதிப்பில் இருந்தும் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறான தொற்றுக்கள் மற்றும் பிரச்சினைகள் ஏற்படும் போது மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

நுவரெலியாவைப் பொறுத்த வரையில் மக்கள் பொறுமையாகத்தான் இருந்தார்கள் அதற்கு நான் முதலில் நன்றி தெரிவிக்க வேண்டும். ஆகவே ஏனைய மாவட்டங்களை போன்று வீதி அபிவிருத்திகள் நடந்தால் நாளை பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும். கடந்த காலங்களில் இந்த வீதியில் மக்கள் செல்ல முடியாத நிலையே காணப்பட்டன.

எத்தனையோ கர்பிணித்தாய்மார்கள் இறந்துள்ளதாகவும் தெரிவித்தார்கள். ஆகவே தான் இந்த வீதியினை அபிவிருத்தி செய்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் மேலும் பல்வேறு அபிவிருத்திகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# 49 ஆவது அமர்வு இன்று ஆரம்பம்

இதன்போது, மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர், இலங்கை தொடர்பான அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார் என அறியமுடிகிறது.

2019 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 40/1 எனும் தீர்மானத்தின் பிரகாரம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான கௌரவம் உள்ளிட்டவை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் அவதானிப்புகள், பரிந்துரைகள் உள்ளிட்டவற்றின் முன்னேற்றம் தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

அதற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக பதிலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சார்பில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நீதியமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஆகியோர் ஜெனீவாவுக்கு நேற்று (27) பயணித்துள்ளனர்.

# இளைஞர் குழுக்களுக்கு...

வவுனியா வைரபுளியங்குளம் பகுதியில் கடந்த இரு தினங்களாக இளைஞர் குளுக்களுக்கிடையில் தொடர்ச்சியாக அடிதடி சம்பவங்கள் இடம்பெற்றுவந்தது.

அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் (26) மாலை குறித்த பகுதியில் அதிகளவான இளைஞர்கள் குழுமியிருந்தனர்.

இதனையடுத்து அந்தப்பகுதிக்கு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தனது சகாக்களுடன் சென்றிருந்தார். இதன்போது இளைஞர்கள் சிலருக்கும் அவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன், தள்ளுமுள்ளு ஏறபட்டது.

இதேவேளை சற்றுநேரத்தில் குறித்த பகுதிக்கு வந்திறங்கிய மற்றொரு குழுவினர் பாராளுமன்ற உறுப்பினருடன் வருகைதந்திருந்த சகாக்களை தாக்கத்தொடங்கினர், அவர்களும் திரும்பித்தாக்கினர்.

இதனால் இருதரப்புக்கும் இடையில் கடுமையான மோதல் இடம்பெற்றதுடன் பாராளுமன்ற உறுப்பினரையும் தாக்க முற்பட்டனர். குறித்த சம்பவத்தால் அந்தப்பகுதியில் சற்றுநேரம் பதற்றநிலை ஏற்பட்டது.

சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது பாராளுமன்ற உறுப்பினர் வாகனத்தில் ஏறி தனது அலுவலகம் நோக்கிச் சென்றார். எனினும் அவரது சகாக்களை துரத்திச்சென்ற குழுவொன்று, மன்னார் வீதியில் அமைந்துள்ள மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரின் அலுவலகத்துக்குள் உட்புகுந்து தாக்க முற்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மோதலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இருவரை கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்றதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சினுவையில் சத்தியம்...

பொலன்னறுவையில் உள்ள தேவாலயமொன்றில் இடம்பெற்ற ஞாயிறு ஆராதனையின் பின்னர் உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து அறிந்தே தான் வெளிநாடு சென்றதாக கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என அவர் மறுத்துள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரோ அல்லது பாதுகாப்புப் பிரிவினரோ தமக்கு அறிவித்திருந்தால் நாட்டை விட்டு வெளியேறியிருக்க மாட்டேன் என அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரில் இருக்கும் போது தாக்குதல்கள் குறித்து தமக்கு அறிவிக்கப்பட்டிருந்தால், உடனடியாக ஊரடங்குச் சட்டத்தை விதித்து, தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தியிருப்பேன் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து பிரஜைகளும் ஏகமனதாக தீர்மானம் எடுப்பதற்கு தியாகங்களைச் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யா - உக்ரேன் மோதல்கள் தேசத்தில் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றும், இது எண்ணெய் ப்பிரைவில் உயர்வினால் வெளிப்படும் என்றும் சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, உலகத் தலைவர்கள் பல மோதல்களைத் தொடங்க முயற்சிக்கின்றனர் என்றார்.

தற்போது பதவிகளோ அதிகாரங்களோ முக்கியமில்லை என வலியுறுத்திய முன்னாள் ஜனாதிபதி, பல்வேறு பிரச்சினைகளினால் அவதியுறும் மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# எதிராக மட்டக்களப்பினும் கையெழுத்து போராட்டம்

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் தலைவர் கி.சேயோன் தலைமையில் இந்த போராட்டம் நடைபெற்றது.

வாலிபமுன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தீபாகரன் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்-முஸ்லிம் மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய முஸ்லிம் அரசியல் கட்சிகளும், இலங்கை ஆசிரியர் சங்கம், கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இந்த கையெழுத்துப்பெறும் போராட்டத்தில் பெருமளவான முஸ்லிம் பெண்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தும் போராட்டம் நடைபெற்றதுடன், இது குறித்த தடைச் சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டமும் நடாத்தப்பட்டது.

இந்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும்வகையில் வருகைதந்த மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை இந்த கையெழுத்து போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

# சுற்றுலா வந்த இருவர் சடலங்களாக மீட்பு

தங்களுடைய இரவு உணவு தேவைக்காக பயன்படுத்திய பாபிகியுவ் என்று அடுப்பை, தங்களைக் குளிரிலிருந்து பாதுகாத்து கொள்வதற்காக அறைக்குள் வைத்து நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, அந்த இயந்திரத்தில் இருந்து வெளியேறிய நச்சு வாயு காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர் .

உயிரிழந்தவர்களின் சடலம், நேற்று (27) காலை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைகள் இடம் பெற்றதன் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக நுவரெலிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இதே போன்றதொரு சம்பவம் நுவரெலியாவில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 20 இலங்கையர்கள் காத்திருப்பு

இந்த விடயம் தொடர்பில் எல்லைப் பகுதி அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், உக்ரேனில் சிக்கியுள்ள இலங்கையர்கள் அனைவரையும் போலந்து ஊடாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தூதுவர் எம்.ஆர். ஹசன் கூறினார்.

# தடுப்பூசி முழுமையெனின் பீசிஆர் தேவையில்லை

முழுமையாக தடுப்பூசிகளை பெற்று 02 வாரங்கள் நிறைவடைந்த சுற்றுலாப் பயணிகள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் வெவ்வேறு கட்டங்களாக தடுப்பூசிகள் அடையாளப்படுத்தப்பட்டு இருப்பதால், இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு, கொரோனா தடுப்பூசியின் பரிந்துரைக்கப்பட்ட அளவுகள் முடிந்து, தடுப்பூசி ஏற்றப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பின்னர் வெளிநாட்டிலிருந்து புறப்பட்டால், அவர்கள் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

08 வயது அல்லது அதற்கு குறைந்த சிறார்கள், ஒரு தடுப்பூசியேனும் ஏற்றியிருப்பின் அது முழுமையான தடுப்பூசி ஏற்றிக்கொண்டதாக கருதப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதானவர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றிருக்காவிடின், நாட்டுக்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலத்துக்குள் பெற்றுக்கொண்ட பீசிஆர் அறிக்கையை சமர்ப்பிப்பது கட்டாயமானது என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# கார்கிவ் விழுந்தது

ரஷ்யாவுக்கு அனைவரும் அஞ்சுவதாகக் கூறியிருந்தார். பொருளாதாரத் தடைகளைத் தாண்டி உதவிகள் வேண்டும் என்று கேட்டிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரேனுக்கு 350 மில்லியன் டாலர் மதிப்புள்ள இராணுவ தளவாடங்களை அனுப்புவதாகக் கூறியுள்ளார். ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளும் இராணுவ உதவி அளிக்க முன்வந்துள்ளன.

போலந்து நாடு உக்ரேனில் இருந்து வந்துள்ள 1 இலட்சம் பேருக்கு தஞ்சம் அளித்துள்ளது. ஹங்கேரி, ருமேனியா நாடுகள் இதுவரை 50,000 உக்ரேனியர்களுக்கு தஞ்சம் கொடுத்துள்ளது. இதுமட்டுமல்லாது, சர்வதேச பணப் பரிவர்த்தனையில் இருந்து ரஷ்யாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கை ஐரோப்பிய நாடுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள்....

இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற ஒரு விசைப்படகையும் அதிலிருந்து 08 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து கிளிநொச்சி கிராஞ்சி கடற்படை முகாமில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள், கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் எஸ். சிவசுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று (27) ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த 08 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டு இருப்பதனால்; அதற்கான உரிய உணவு, மருந்துகளை வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

ஷஇவ்வாறு கைது செய்யப்பட்ட 8 பேரில் 16 வயதுடைய 18 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விலையை அதிகரிக்கும் திட்டங்கள்இ ல்லை

ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருளை அதிகரித்துள்ள நிலையில், எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதற்கான எந்தவிதமான திட்டங்களும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போதைக்கு இல்லையென கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் அதிகரிப்பு தொடர்பில் எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடப்படலாம் எனவும், இது தொடர்பில் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தீர்மானம் ஒன்றை எடுப்பார் என்றார். ஐ.ஓ.சி நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருளின் விலைகளை அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் டீசலின் விலையை 15 ரூபாயாலும், பெற்றோலின் விலையை 20 ரூபாயாலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# C190 சமவாயத்தை இலங்கையிலும் அங்கீகரித்தல்

## தெளிவுப்படுத்தி எம்.பிக்களுக்கு ஒருநாள் செயலமர்வு

■ மகேஸ்வரி விஜயனந்தன்

பணியிடங்களில் இடம்பெறும் உடல், உள, பாலியல் ரீதியான மற்றும் பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைத் தடுத்தல் போன்ற ஏற்பாடுகளைக் கொண்டுள்ள, உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO)வின் C190 சமவாயத்தை இலங்கையில் சட்டரீதியாக அங்கிகரித்தல் தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவுப்படுத்தும் செயலமர்வு, பத்தரமுல்ல- வோட்டர்ஸ்எஜ் ஹோட்டலில் கடந்த 25 ஆம் திகதியன்று நடைபெற்றது.

இலங்கை தொழிற்சங்க ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த செயலமர்வில், மலையகத்தைப் பிரதிநிதித்துப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், அ. அரவிந்தகுமார், வே. இராதாகிருஸ்ணன், எம். உதயகுமார், மனோ கணேசன் ஆகியோருடன், ரவூப் ஹக்கீம், முஜிபுர் ரஹ்மான், அலி சப்ரி ரஹீம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குறித்த சமவாயம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்கும் போது, பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக, செயலமர்வில் கலந்துகொண்ட பராளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

இச்செயலமர்வின் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ஏ.சர்வேஸ்வரன், சிரேஷ்ட சட்டத்தரணி சியாமலி ரனராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசாங்கம் இந்த சமவாயத்தை ஏற்று அங்கிகரிப்பது மூலம் வேலையாட்களையும் தொழில் வழங்குனர்களையும் சமூகத்தையும் பாதுகாக்கலாம் என இதில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையின் தொழிற்சட்ட பரப்பில் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் மாத்திரமே பணியாட்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதாகவும் இது தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதென தெரிவித்தனர்.

எனவே, இலங்கையில் பணியாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான ஒரு சட்டத்தை உருவாக்கவும் அந்த சட்டத்தில் C190 சமவாயத்தில் உள்ள ஏற்பாடுகளையும் உள்ளடக்கி அதன் மூலம் வேலையாட்களை பாதுகாக்க எமது நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும் என்றும் வளவாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# மன்னார் உதைப்பந்தாட்ட வீரர் மாலைதீவில் உயிரிழப்பு

■ றொசேரியன் லம்பேட்

இலங்கை உதைபந்தாட்ட அணி வீரரும் மாலைதீவின் கழக அணி வீரருமான டக்ஸன் பியுஸ்லஸ், (வயது 31) மாலைதீவில் நேற்று முன்தினம் (26) உயிரிழந்துள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர். பாடசாலை காலத்தில் மத்திய களத்தில் (CD) தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இருந்தார்.

இலங்கை அணியின் தேசிய அணியில் இடம் பிடித்த இவர், உதைப்பந்து உலக கிண்ண கோப்பைக்கான (FIFA World Cup) தகுதிகான் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார். அத்துடன், இலங்கை தேசிய அணியில் சிறந்த பின்கள வீரராகவும் இவர், விளங்கினார்.

2021 இல் ஆண்டு இடம்பெற்ற SAFF கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ,இந்திய அணியுடனான போட்டியில் சிறந்த வீரருக்கான விருந்தினை பெற்றுக்கொண்டார். இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.




இவ்வருடத்துக்கான மிக பிரபலமான வீரருக்காக இடம் பெற்ற கருத்து கணிப்பில் பியூஸ்லஸ் ரன்னரப்பாக, தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது மரணத்திற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்றாலும் தனதுயிரை அவர் மாய்த்துக்கொண்டிருக்கலாம் என்றும் மாலைத்தீவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க

# அரசியல் நெருக்கடியை முதலில் தீர்க்க வேண்டும்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால் பாரிய அரசியல் நெருக்கடி ஒன்று இருப்பதாக தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, அரசியல் நெருக்கடியை தீர்க்காது பொருளாதார நெருக்கடியை சரி செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

தங்கல்லையில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் கலந்துகொண்டதன் பின்னர், அங்கு இடம்பெற்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், பல வருடங்களாக நாம் தயாராகிக்கொண்டிருக்கும் மாற்றத்தை தற்போது ஏற்படுத்த முடியும் என நினைக்கிறேன். அதனை எம்மால் உணர முடிகிறது. தற்போது எமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பை பயன்படுத்தி நாட்டை கட்டியெழுப்பு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி




எமது சமையலறைக்கு உள்ளே வந்துள்ளது. இதனை எம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இந்த பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் பாரிய அரசியல் நெருக்கடி ஒன்று உள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்றார்.

அரசியல் நெருக்கடியை சரிசெய்யாது, பொருளாதார நெருக்கடியை சரி செய்ய முடியாது. நாட்டின் இந்நிலைமைக்குக் காரணமான அரசியல் கலாசாரத்தை மாற்றுவது எவ்வாறென சிந்திக்கவேண்டும் என்றார்.





## மன்னாரில் கையெழுத்து வேட்டை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க கோரி, நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கையெழுத்து போராட்டம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில், மன்னார் பேருந்து நிலையத்தில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்ற போர்வையில் மனித உரிமைக்கு எதிராக பயன்படுத்தப்படும் அந்த சட்டத்தை முற்றாக ஒழிக்குமாறு கோரி, கையெழுத்து திரட்டும் இந்த நடவடிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் ,இராசமாணிக்கம் சாணக்கியன் நகரசபை ,பிரதேச சபை உறுப்பினர்கள் ,தவிசாளர்கள், பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், மத குருக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு கையெழுத்து போராட்டத்திற்கு ஆதரவளித்தனர்

'நவரசம்' எனும் கவிதை நூல் வெளியிட்டமையின் காரணமாக பயங்கரவாத தடை சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அஹ்னாப்பும் கையெழுத்து போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (றொசேரியன் லம்பேட்)

# 'நாட்டில் பட்டினிச் சாவு இல்லை'

நாட்டில் பட்டினிச் சாவு இல்லையெனத் தெரிவிக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும், வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை எனவும் தெரிவித்தார்.

கொழும்பு-05, பாமன்கடை சந்தியில் நிர்மாணிக்கப்படும் பாலத்தின் நிர்மாணப் பணிகளால் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கொவிட் காரணமாக எதுவும் செய்ய முடியாது என்று தலைமறைவாகும் அரசாங்கம் நாமல்ல. மக்களுக்கு வாக்குறுதியளித்தபடி, எத்தனை தடைகள், பொருளாதார பிரச்சினைகள் வந்தாலும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நிறுத்த நாங்கள் தயாராக இல்லை. இன்னும் சில மாதங்களில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் பட்டினிச் சாவு இல்லை. அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமீபகாலமாக எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. எந்த வாகனமும் குறைவாக ஓடுவதை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? ஒன்றரை வருடங்களாக வீடுகளுக்குள்ளேயே



முடங்கிக் கிடந்தது மக்களுக்குத் தெரியும். அப்போது சாதிக்க முடியாத நாட்டின் பொருளாதாரத்தையும், தமது பொருளாதாரத்தையும் வலுப்படுத்த மக்கள் தங்களின் முழு பலத்தையும் பயன்படுத்த பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

நாட்டில் சீமெந்து பிரச்சினை இருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆட்சியைப் பிடிக்க நாங்கள் தயார் என்று கூறுவதைக் கண்டேன். யார் இந்த நபர்கள் ? இந்த நாட்டையே தின்று, இந்த நாட்டை அழித்து, மத்திய வங்கியை கொள்ளையடித்து, நாட்டின் பொருளாதாரத்தை தலைகீழாக புரட்டி, நாட்டின் தேசிய பாதுகாப்பை அழித்து, இன்று நாட்டில் அப்பாவி மக்கள் இறப்பதற்கு வழி செய்தவர்களே இவ்வாறு கூறுகிறார்கள் என்றார்.

### ரஷ்யா – உக்ரைன் யுத்தம்:

# இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பை செலுத்தும்



ரஷ்யா - உக்ரேன் யுத்தத்தால், உக்ரேனில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எதிர்வரும் மாதங்களில் கடுமையாகக் குறைவடைய கூடுமெனத் தெரிவித்த இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தம்மிக்க விஜேசிங்க, இலங்கையின் சுற்றுலாத்துறையில் இது கடுமையான பாதிப்பை செலுத்தும் என்றார்.

கடந்த ஜனவரி 24ஆம் திகதி வரையில் உக்ரேனில் இருந்து 12 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத்தந்திருந்தனர். இந்த எண்ணிக்கையானது எதிர்வரும் மாதங்களில் 6 ஆயிரமாகக் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

ரஷ்ய - உக்ரேன் யுத்தத்தால் வான்வழிப் பயணங்கள் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. இதனால், உக்ரேன் சுற்றுலாப் பயணிகள் அதிகளவானோர் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்க முடியாது என்றார்.

இலங்கைக்கு வருவதை அவர்கள் முழுமையாக நிறுத்தாவிட்டாலும், உக்ரேன் சுற்றுலாப் பயணிகள் வருகையில் பாரியளவிலான வீழ்ச்சிகள் ஏற்படும் எனவும் கூறியுள்ளார்.

# மதுபானங்களை விற்பதற்கு அனுமதி

சுற்றுலாத்துறை மேம்படுத்துவதற்காக, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து ஹோட்டல்கள், விருந்தனர் இல்லங்கள், தங்கும் விடுதிகளில் மென்பானங்கள், மதுபானங்கள், வைன் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அங்கிகாரம் கிடைத்துள்ளதாகவும், குறைந்த வருமானங்களைக் கொண்ட விருந்தனர் இல்லங்களில் மதுபான விற்பனைகளுக்கு அனுமதி வழங்கப்படாது இருந்த நிலையில் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடற்கரை, பூங்காக்கள் போன்ற பொதுஇடங்களில் வைத்து மதுபானங்களை அருந்துவதை இது குறைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



### முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்

# ராஜபக்ஷர்களுக்கு சவால்

முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் என ராஜபக்ஷர்களுக்கு சவால் விடுத்துள்ள தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு உறுப்பினர் கே.டி.லால் காந்த, அரசாங்கத்தை எவ்வாறு வெளியேற்றுவதென்றே மக்கள் பார்த்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தங்கல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பேரணியில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், உலக மக்கள் அனைவரும் ரஷ்யா - உக்ரேன் யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இலங்கை மக்களோ இந்த அரசாங்கத்தை எவ்வாறு வெளியேற்றுவதென்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான போராட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக 2019ஆம் ஆண்டே பதவியேற்றுக்கொண்டார். 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்த அரசாங்கம் பதவியேற்றுக்கொண்டது. ஆட்சிக்கு வந்த விரைவிலேயே இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் அரசாங்கத்தை வெளியேற்றுவதற்கான போராட்டத்தை கடந்த வரும் ஓகஸ்ட் மாதமே தேசிய மக்கள் சக்தி ஆரம்பித்துவிட்டது என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக நாட்டில் அதிகளவில் சேறுபூசும்




> நடத்த வேண்டிய தேர்தலை ராஜபக்ஷர்கள் தொடர்ந்து காலந்தாழ்த்தி வருகிறார்கள். பொதுத்தேர்தலுக்கும் இன்னும் மூன்றரை வருடங்கள் இருக்கின்றன என்றும் கே.டி. லால் காந்த மேலும் தெரிவித்தார்

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. எதிரிகளுக்கு அதிகமாக வலிக்கிறது என்பதே இதனூடாக தெரிகிறது.

ராஜபக்ஷர்களின் ஆட்சியில் விவசாயிகள், மீனவர்கள், மத்தியத்தர வர்க்கத்தினர் ஆகியோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நடத்த வேண்டிய தேர்தலை ராஜபக்ஷர்கள் தொடர்ந்து காலந்தாழ்த்தி வருகிறார்கள். பொதுத்தேர்தலுக்கும் இன்னும் மூன்றரை வருடங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்த லால் காந்த. முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் என ராஜபக்ஷர்களுக்கு அவர் சவால் விடுத்தார்.

கிழக்கில் 4 ஆயிரம்

# ஆசிரியருக்கு தட்டுப்பாடு

■ சகா

கிழக்கில் ஆளணியின்படி, சுமார் 24 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. எனினும், தற்போது 20 ஆயிரம் ஆசிரியர்களே இருக்கின்றனர். சுமார் 4,000 ஆசிரியருக்கு தட்டுப்பாடு நிலவியது என கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக தெரிவித்தார்.

எனினும், அண்மையில் 3 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். கிழக்கு பாடசாலைகளில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண கல்விச் செயலாளர் மேலும் உரையாற்றுகையில்: "கல்விப் புலத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. சரியான ஆராய்ச்சிகள் இல்லாமையே அதற்குக் காரணம். பிரச்சினைகள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

"ஒரு பாடசாலையைத் திறந்தால் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிடலாம் என்பார்கள். சுகாதாரத்துக்கு அடுத்தபடியாக கல்விக்கு பில்லியன் கணக்கில் செலவுசெய்கிறார்கள்.

"ஆனால், கல்விக்காக செலவழிக்கும் பில்லியனுக்கு கைமாறாக நாம் என்ன உற்பத்தி செய்திருக்கிறோம். துரதிர்ஷ்டவசமாக கிழக்கு தொடர்ந்து 9ஆவது இடத்தில் இருந்து வருகிறது.

"கல்வியில் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவர அனைவரும் சிந்திக்கவேண்டும். திட்டங்கள் வகுத்து அதன்படி உழைக்கவேண்டும். 'அனைவருக்கும் கல்வி' என்பது யுனிசெவ் தொடக்கம் பல நாடுகளுக்கும் பொதுவான வாசகமாகவுள்ளது.' சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி' என்பதே எனது வாசகம்.



"கிழக்கில் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாதுள்ளனர். மேசன், தச்சு போன்ற வேலை செய்கின்றனர். அப்படியெனின், எங்கோ ஒரு தவறு நடந்திருக்கிறது. அதனை ஆராயவேண்டும்.

"கிழக்கு மாகாணம் இன்னும் 3 வருடங்களில் 5ஆவது இடத்தை அடைய வேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.



நடமாடும் சேவை

# நடமாடும் சேவை ஏமாற்று வேலை

■ க. அகரன்

வவுனியாவில் இடம்பெற்று வரும் காணிப் பிரச்சனை தொடர்பான நடமாடும் சேவையால் மக்கள் தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், அதனை தீர்ப்பதற்கு அமைச்சரவை நேரடியாக கையாளும் வழிமுறையை ஏற்ப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (27) இடம்பெற்ற காணி தொடர்பான நடமாடும் சேவையில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இந்த நடமாடும் சேவை என்பது வரவேற்கதக்க விடயம். ஆனால், எமது மக்கள் இச்சேவையிலே நம்பிக்கை அற்றுப்போய் இருக்கின்றார்கள். தொடர்ச்சியாக அந்தந்த பகுதிகளின் பிரதேச செயலாளர்கள் மக்களுக்குச் சொல்லும் பதிலையே இப்போதும் சொல்லப்போகின்றார்கள். எனவே, மக்கள் இதில் தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் வாய்ப்பே இல்லை.

"இந்த நடமாடும் சேவைகள் தொடர்ச்சியாக ஒரே தவறையே விட்டுக்கொண்டிருக்கின்றது. அதனை நிறுத்துவதென்றால் அமைச்சரவை ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். இந்த காணிப் பிரச்சனையை நேரடியாக கையாளுகின்ற ஒரு வழிமுறையை அவர்கள் செயற்படுத்த வேண்டும்.

"அத்துடன், வட மாகாண காணி ஆணையாளருக்கு, இந்தக் காணி பிரச்சினையை தீர்ப்பதற்கான காணிக்கச் சேரியை நடத்துவதற்கு தாங்கள் அதிகாரம் வழங்கியிருப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். அது உண்மையா பொய்யா என்று தெரியவில்லை. அப்படி அதிகாரம் வழங்கியிருந்தால், வட மாகாண காணி ஆணையாளர் எமது மக்களின் பிரச்சனைகளை உண்மையில் தீர்த்திருக்கவேண்டும். காணிக் கச்சேரியை நடத்தியிருக்கவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

"குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கில் தான் காணி பிரச்சினைகள் தீர்க்காமல் இருப்பதான குற்றச்சாட்டை அமைச்சர் முன்வைத்துள்ளார். உண்மையில் அது எமக்கு ஒரு தலைகுனிவுதான்.

"இந்த நடமாடும் சேவை என்பது ஏமாற்றுகின்ற விடயமாகதான் இருக்கிறது. காணிப் பிரச்சினைகளை முழுமையாக காணி அமைச்சே கையாளவேண்டும்.

"ஆகவே, பிரதேச செயலகங்களில் மக்கள் சென்று களைப்படைந்த நிலையில் மீண்டும் அதே அதிகாரிகளை எமது மக்கள் சந்தித்துப் பேசுவதென்பது தீர்வாகாது" என்றார்.





# 'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீடு

■ எம்.ஏ.றமீஸ்

ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய 'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீட்டு விழா, அட்டாளைச்சேனை அல்-ஷகி வரவேற்பு மண்டபத்தில் நேற்று (27) இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, கவிதை நூலை வெளியீட்டு வைத்தார்.

இலக்கிவாதிகள், நிர்வாக சேவை அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள், சுகாதாரத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

செய்னம்பு ஹஊசைமா வெளியீட்டகத்தால் இக்கவிதை நூல் வெளியீடு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது விழா தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் கலைஞர் ஏ.எல்.அன்ஸார் சிறப்புரை நிகழ்த்தியதுடன், நூல் மீதான உரையை இலக்கிய ஆய்வாளர் எம்.அப்துல் றஸாக், விமர்சகர் சிறாஜ் மசூர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை தலைவர் கலாநிதி எஸ்.எம். ஐயூப் உள்ளிட்ட இலக்கியவாதிகளால் நிகழ்த்தியதோடு, கலை, கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

சிவராத்திரிக்கு 20 ஆயிரம்

# உருத்திராட்சை மாலை தயார்

■ சகா

தமது முழுமுதற் கடவுளான சிவனை நினைந்து அனுஷ்டிக்கும் மஹா சிவராத்திரி விரதம், நாளை (01) ஆகும்.

அதனையொட்டி, சைவசமயிகள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் மஹா சிவராத்திரிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. குறிப்பாக சிவாலயங்களில் சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதேவேளை, சித்தர்களின் குரல் அமைப்பினர் சிவராத்திரியையொட்டி, பக்தர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு, 20ஆயிரம் உருத்திராட்சை மாலைகளை தயார்படுத்தியுள்ளர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் மேலாளர் சிவசங்கர் ஜீ தலைமையில் மகேஸ்வரன் ஜீயின் பங்கேற்புடன், இவ் உருத்திராட்சை மாலைகள் நேற்று முன்தினம் வரை மட்டக்களப்பு நகரில் தயார்படுத்தப்பட்டன.



ஊடக அடக்குமுறைக்கு எதிராக

# மாபெரும் கவனயீர்ப்பு

■ க.விஜயரெத்தினம்

ஊடக அடக்குமுறைக்கு எதிராக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று மட்டக்களப்பில் எதிர்வரும் சனிக்கிழமை (05) இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் மற்றும் மட்டக்களப்பு ஊடகவியலாளர் தொழிற்சங்கம் ஒன்றிணைந்து இந்தக் கவயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்கின்றன.

அன்றைய தினம் காந்தி பூங்கா முன்பாக காலை 10 மணியளவில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள் மற்றும் நலன்விரும்பிகள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக ஊடகவியலாளர் தாக்கப்படுவதை கண்டித்தும், அச்சுறுத்தல், விசாரணைகள் இடம்பெறுவதை நிறுத்தக் கோரியும் மற்றும் நாட்டில் நடக்கும் ஊடக அடக்குமுறையைக் கண்டித்தும், இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மக்களை கவனிப்பதில்லை என்ற கருத்துக்கு

# ஒருபோதுமே இடமில்லை

■ க.அகரன்

இந்த நாட்டின் பிரஜை என்றவகையில் எந்தவொரு பகுதியிலும் வாழ்வதற்கான உரிமை அனைவருக்கும் இருப்பதாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

வன்னி மாவட்ட காணிப் பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவை, வவுனியாவில் நேற்று (27) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "காணி என்ற விடயம் மிகவும் முக்கியமானது. அதன் ஆவணங்கள் என்பது ஒருவரது வாழ்வின் பல்வேறு தேவைகளுக்கு முக்கியமாக காணப்படுகின்றது. வடக்கு மக்களை நாம் கவனிப்பதில்லை என்ற குறைபாடு சொல்லும் கருத்துகளும் உண்டு. அந்தக் கருத்துகளுக்கு ஒருபோதுமே இடமில்லை.

"இன, மத வேறுபாடில்லாமல் வடபுலம், தென்புலம் என்ற பேதங்கள் இல்லாமல் காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கோடு, இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

"இங்கு வாழ்கின்ற பொதுமக்கள் என்ற வகையில் நாட்டில் பிறந்தவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு இந்த நாட்டிலே எந்தவொரு இடத்திலும் குடியிருப்பதற்கும், வீடொன்றைக் கட்டுவதற்கும், வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும் உரித்து இருக்கின்றது. இந்த விடயத்தில் எந்த வேறுபாடுகளும் பார்க்க முடியாது. அனைவருமே சமமாக மதிக்கப்பட வேண்டும்" என்றார்.



சந்நிதியான் ஆச்சிரமத்தின்

# மலையகத்துக்கான சமூக சேவை

■ எஸ்.தில்லைநாதன்

ஊவா மாகாணத்தில் உள்ள பண்டாரவளையில் அமைந்துள்ள கிரேக்கத் தோட்டத்திலுள்ள நாளாந்தம் கூலி வேலை செய்யும் 125 குடும்பங்களுக்கு 350,000 ரூபாய் பெறுமதியான அத்தியவசியமான உலர் உணவுப் பொருள்கள், சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று (27) வழங்கி வைக்கப்பட்டன.

இவ் உலர் உணவு வழங்கும் நிகழ்வானது, கிரேக்கத் தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி அரங்கத்தில் நடைபெற்றது.

இவ் உதவியை வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கி வைத்தார்.

பருத்தித்துறை வைத்தியசாலையில்

# கட்டடத் தொகுதி திறப்பு விழா

■ எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் MJF அறக்கட்டளை நிதியம் மற்றும் Lan& Barbara Karan நிதியத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் மூன்று மாடி கட்டடத் தொகுதி திறப்பு விழா, நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் கமலநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



கல்முனையில்

# பூஸ்டர் பெற்றவர்களின் சதவீதம் குறைவு

■ எம்.எம்.ஹனீபா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களின் சதவீதம் குறைவாக காணப்படுவதால், பைஸர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ளுமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (27) கேட்டுக்கொண்டார்.

முதலாவது, இரண்டாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் கொரோனா தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் முழுமையாக பாதுகாக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படவுள்ளதால் அரச உத்தியோகத்தர்கள், வெளி இடங்களில் இருந்து வருபவர்கள், வியாபார நிலையங்களில் உள்ளவர்கள் மற்றும் பொது இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் தவறாமல் தப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தடுப்பூசி அட்டை பரிசோதனை செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.



பதுளையில் 3 தோட்டங்களில் காணிகள் அபகரிப்பு

# 102 குடும்பங்கள் நிர்க்கதி

எம். செல்வராஜா

பதுளை மாவட்டத்தில் பசறை, தெமோதரை, ஹப்புத்தளை ஆகிய மூன்று இடங்களில் உள்ள பெருந்தோட்டக் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இச்செயற்பாடுகளினால் சுமார் 102 தொழிலாளர் குடும்பங்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன.

அத்துடன், ஹப்புத்தளை நீட்வூட் தோட்டத்திலுள்ள அரச பாடசாலை கட்டடங்களையும் அப்புறப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. அவ்வாறு அகற்ற மறுப்பின் பாடசாலை அமைந்துள்ள காணிக்கு பணம்செலுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து, ஊவா மக்கள் ஒன்றியம் ஊடாக, பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை அமைப்பிடம் நேற்று (27) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக பசறை- கோணக்கலையில் இரு தொழிலாளர் குடும்பங்கள் குடியிருக்கும் தனிவீடுகளிலிருந்து அவர்களை வெளியேறுமாறு பசறைப் பிரதேச செயலகம் ஊடாக பணிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அறிவுறுத்தல் பதாதைகளும் குறிப்பிட்ட வீட்டுச்சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளன. "அரசாங்கத்தின் ஓர் இலட்சம்" வேலைத்திட்டத்துக்கு அமைய 'சேவாபியச' என்ற சேவைநிலையம் அப்பகுதியில் அமையவிருப்பதினால் குறிப்பிட்ட இரு வீடுகளிலிருந்தும் தொழிலாளர்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஊவா மக்கள் ஒன்றியம் ஊடாக பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை அமைப்பிடம் (எம்.பி.பி.எல்.ஆர்) நேற்று (27) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி ஸ்ரீ தலதா முன்பாக

# உக்ரேன் யுவதி ஆர்ப்பாட்டம்

மொஹொமட் ஆஸிக்




இலங்கையிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் உக்ரேன் யுவதியொருவர், உக்ரேன் மீதான சோவியத் ரஷ்யாவின் தாக்குதலைக் கண்டித்து, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை முன்பாக தனி நபர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் (26) முன்னெடுத்திருந்தார். .

தமது தாய் நாட்டின் மீதான தாக்குதலுக்கு ஒவ்வோர் உக்ரேன் பிரஜையும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் கண்டியில் தொழில் புரியும் தான் தனியொரு பெண்ணாக இருந்து தனது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவும் குறைந்த பட்சம் சமூக ஊடகங்கள் வாயிலாகவேனும் தனது தாய் நாட்டின் மீதான பற்றை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காகவே இவ்வார்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

லிந்துலையில் மரத்தில் சிக்கியவர்

# பத்திரமாய் இறக்கப்பட்டார்

ரஞ்சித் ராஜபக்ஷ

200 அடி உயரமான மரத்தில் ஏறி, கிளைகளை வெட்ட முயற்சித்த தொழிலாளி ஒருவர், திடீர் நோய்வாய்பட்டதால், 3 மணிநேர போராட்டத்தின் பின்னர், அவரை பத்திரமாய் கீழே இறக்கிய சம்பவமொன்று லிந்துலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

லிந்துலை- லெமேரியா தோட்டத்தைச் சேர்ந்த 25 வயதான பாலச்சந்திரன் அதிஸ்டகுமார் என்ற இளைஞர், நேற்றுமுன்தினம் (26) காலை மரத்தின் கிளைகளை வெட்டுவதற்காக 200 அடி உயரமான கருப்பந்தேயிலை (யூக்கலிப்டஸ்) மரத்தில் ஏறியுள்ளார்.

இந்த நிலையில், நேற்று காலை குறித்த பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக, மரத்திலேயே அந்த இளைஞர் திடீர் நோய்வாய்ப்பட்டுள்ளார்.

இதனையடுத்து லெமேரியா தோட்ட இளைஞர்கள் லிந்துலை பொலிஸாரின் ஒத்துழைப்புடன், கடும் பிரயத்தனங்கள் செய்து 3 மணித்தியாலங்களின் பின்னர், மரத்திலிருந்து அந்த இளைஞனை கீழே இறக்கி, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.



மாவட்டம் தாண்டிய அபிவிருத்திகளையே

# காங்கிரஸ் முன்னெடுக்கிறது

பாரத் தெரிவிப்பு: 'புள்ளக்காம்பரா' அல்ல என்கிறார்

எஸ்.கணேசன்



மாவட்டம் தாண்டிய அபிவிருத்தி பணிகளையே காங்கிரஸ் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப- செயலாளரும், பிரஜா சக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி, மலையக மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் எமது சேவை தொடரும் என்றார்.

பன்வில- ரங்கல பெரு தோட்டம் மற்றும் பன்வில ஆத்தல மேற்பிரிவு ஆகிய பகுதிகளில் நேற்று (27) நடைபெற்ற நவீன வசதிகளுடன் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த பகுதியில் அமையவுள்ள இந்த நிலையமானது, 'புள்ளக்காம்பரா' அல்ல. இதனை "சிறுவர் அபிவிருத்தி நிலையம்" என்றே விளிக்க வேண்டும். அதற்கேற்ற வகையிலேயே உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. கணினி முதல் தேவையான அனைத்து பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படும். அதன்மூலம் சிறந்ததொரு முன் அனுபவத்துடன் எமது பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் காலடி எடுத்து வைக்க முடியும்.

வாக்குதான் எமது இலக்கெனில் இதனையும் நுவரெலியாவுக்குதான் செய்திருக்க வேண்டும். ஆனால் வாக்கு என்பது எமது நோக்கமல்ல. மக்கள் சேவையே பிரதானமானது. எமது மக்கள் வாழும் பகுதிகளுக்கெல்லாம் எமது பணிகள் சென்றடையும் என்றார்.

கண்டி மாவட்டத்துக்கு ஆளுங்கட்சியின் சார்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்திருந்தால் பாரிய சேவைகளை முன்னெடுத்திருக்கலாம். ஆனால், எதிரணியில் இருப்பவரால் அதனை செய்யமுடியாது. அவர்களால் கோவில் மணி உள்ளிட்ட பொருட்களை மட்டுமே வழங்க முடியும். அதனை தாண்டி பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது என்றார்.

# நல்லிணக்கத்துக்கானது





தேசிய நல்லிணக்கத்தை பலப்படுத்தும் நோக்கில், தேசிய மொழிக்கல்வி பயிற்சி நிறுவனம் நடத்திய இரண்டாம் மொழி தமிழ் பாடநெறியின் இறுதிநாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தொலுவ, உடபளாத்த பிரதேச செயலகப் பிரிவு அரச ஊழியர்களுக்கான 150 மற்றும் 200 மணித்தியால பயற்சி நெறியின் இறுதிநாளில் கலைவிழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (மெய்யன்)

உக்ரேனில் வாழும் இலங்கையர்களை

# பாதுகாப்பான முறையில் மீட்க வேண்டும்

## செந்தில் தொண்டமான் கோரிக்கை

"உக்ரேனில் முழு வீச்சிலான போரை ரஷ்யா ஆரம்பித்துள்ள நிலையில், உக்ரேனில் வாழும் இலங்கையர்களை பாதுகாப்பான முறையில் மீட்க வேண்டும்" - என இ.தொ.வின் உப தலைவரும், பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வெளிவிவகார அமைச்சின் செயலாளரை தொடர்புக்கொண்டு தெரிவித்துள்ளார்.

"துருக்கி வழியாக இவர்களை பாதுகாப்பான முறையில் மீட்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக" வெளிவிவகார அமைச்சின் செயலாளர் செந்தில் தொண்டமானிடம் இதன்போது கூறியுள்ளார்.

உக்ரைனில் உள்ள இலங்கையர்களின் குடும்பத்தினர், அங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலையினால் பதற்றம் அடைந்துள்ளனர். அவர்களை பாதுகாப்பான முறையில் மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.



கொல்லப்பட்ட சிறுத்தையின்

# உடற்பாகங்கள் சில மாயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

"நோர்டன்பிரிட்ஜ்- விதுலிபுர பிரதேசத்திலுள்ள தனியார் தேயிலைத் தோட்டமொன்றில் சந்தேகத்துக் இடமான முறையில் உயிரிழந்த சிறுத்தை கொல்லப்பட்டுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது" என நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு அதிகாரி பிரபாஸ் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 25ஆம் திகதி, அங்கிருந்து கைப்பற்றப்பட்ட சிறுத்தையின் உடலத்தில், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட காயங்களும் காணப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், பற்கள் உள்ளிட்ட உடற்பாகங்கள் சில அகற்றப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்றார்.

இந்த நிலையில், சிறுத்தையின் உடலம் நேற்று முன்தினம் (26) ஹட்டன் மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் சஞ்சீவ பொன்சேகாவின் உத்தரவுக்கமைய பிரேத பரிசோதனைக்காக பேராதனை மிருக வைத்திய பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் தெரிவித்தார்.

அத்துடன் 4 வயதான குறித்த ஆண் சிறுத்தையை கொன்றவர்களை கைதுசெய்வதற்கான விசாரணையை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மகா சிவராத்திரி விழாவும் ஜோதிலிங்க தரிசனமும்

நடராஜா மலர்வேந்தன்

அட்டாம்பிட்டிய தோட்ட, முதலாவது பிரிவில் அமைந்திருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் இந்து மன்றம் மற்றும் தோட்டப் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகா சிவராத்திரி விழா, நாளை மறுதினம் (1) மாலை 6 மணிமுதல் நடைபெறவுள்ளது.

விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் சைவ பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளுடன் கோயில் வளாகத்தில் இடம்பெறவுள்ள மகா சிவராத்திரி விழாவில், பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் தென்னிந்திய புனித சிவத்தலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட ஜோதிலிங்கத்தை தரிசனத்திற்காக அங்கு பிரதிஷ்டை செய்யவுள்ளனர்.

இப்பகுதியில் இடம்பெறும் முதலாவது ஜோதிலிங்க தரிசனம் இதுவாகுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருள்களுடன் கைதான

# 35 பேருக்கு பிணை

ரஞ்சித் ராஜபக்ஷ



பல்வேறு போதைப் பொருள்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரைச் சென்ற 35 பேர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் ஹட்டன்- நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதனையடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.

போதைப் பொருள்களுடன் சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் செல்பவர்களை கைதுசெய்யும் சோதனை நடவடிக்கை, ஹட்டன் ரயில் நிலையம், ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் தியகல மற்றும் செனன் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்த சோதனை நடவடிக்கைக்கு ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் ஸ்டுவட் என்ற மோப்ப நாயும் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 20- 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் காலி, மாத்தறை, கொழும்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 3 மாதங்களில் போதைப் பொருள்களுடன் பயணித்த 200 பேர் கைதுசெய்யப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவ்வாறானவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கேகாலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான

# முழுநாள் செயலமர்வு

என்.ஆராச்சி



கேகாலை மாவட்டத்தில் அனைத்து இனம் மற்றும் மதங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட, இளைஞர், யுவதிகளுக்கான முழுநாள் செயலமர்வு, கலிகமுவ- பதவத்த மண்டபத்தில் நடைபெற்றது.

வன்முறை, இனவாதம், வெறுப்பு பேச்சு என்பவற்றை தடுத்தல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் விரிவுரைகள், அன்றையதினம் நடத்தப்பட்டன. தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் கேகாலை மாவட்ட அபிவிருத்தி நிலையம் மற்றும் கேகாலை மாவட்ட சர்வமத அமைப்பு என்பவற்றின் ஒருங்கமைப்புடன் முன்னெடுக்கப்பட்ட இந்த செயலமர்வில், கேகாலை மாவட்டத்திலிருந்து அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 55 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

புஸ்ஸலாவை உப பொலிஸ் நிலையத்தின்

# பெயர்ப்பலகை சேதம்




எஸ். யோகா

புரட்டப் தோட்டப் பகுதியில் திறந்து வைக்கப்பட்ட புஸ்ஸலாவை உப பொலிஸ் நிலையத்தின் பெயர்ப்பலகையானது, இனம் தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (26) இரவு, கற்கள் எறிந்து பெயர் பலகை சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த புஸ்ஸலாவை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# நிறுவனங்களின் தான்தோன்றித்தனமும் வேடிக்கை பார்க்கும் அரசாங்கமும்

ஒவ்வொரு நாளும் கண்விழித்தெழும்போது, எந்தெந்த பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன, எனக் கேட்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் நமது நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

விலை அதிகரிப்பைப் பொறுத்தவரை, பொறிமுறையொன்று இருந்தது. விலை அதிகரிப்பு தொடர்பிலான கோரிக்கை, நுகர்வோர் அதிகார சபையிடம் முன்வைக்க வேண்டும், அதனை வாழ்க்கைச் செலவுக்குழு ஆராயவேண்டும். தேவையேற்படின் அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும். இன்றேல் யோசனை தூக்கிவீசப்பட்டுவிடும்.

இந்த நடைமுறையை தற்போதைய நிலைமையில் காணக்கிடைப்பது அரிது. நிறுவனங்கள் பல தான்தோன்றித்தனமாக, நினைத்தபடி, இரவோடு இரவாக, பொருட்களின் விலைகளை அதிகரித்துக்கொள்கின்றன. அதனை எதிர்த்து குரல்கொடுப்பதற்கு திராணியற்றவர்களாக பலரும் இருப்பதுதான் வெட்கித் தலைகுனியச் செய்துள்ளது.

எரிபொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடுகள் நாட்டில் நிலவுகின்றன. பெரும்பாலான வீதிகளில் வாகன நெரிசலை காணக்கிடைப்பதில்லை. எனினும், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசை நிற்கிறது.

வாகனங்களில் பெரல்களுடன் வருவோர், தாங்கள் நினைத்த அளவுக்கு எரிபொருட்களை நிரப்பிக்கொண்டு சென்றுவிடுகின்றனர். காலையில் இருந்து கால்கடுக்க காத்திருந்தோரில் பலருக்கும் எரிபொருட்கள் கிடைக்காமையால் வெறுங்கையுடன் திரும்பிவிடுகின்றனர்.

தட்டுப்பாடு நிலவுக்கின்ற நிலையில், ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருட்களின் விலைகளை, வெள்ளிக்கிழமை (25) அதிரடியாக அதிகரித்தது எப்படி? இதுதான் தான்தோன்றித்தனமான செயற்பாடாகும். அதுமட்டுமன்றி, அரசாங்க நிர்வாகத்தில் ஒரு பொறிமுறை இல்லையென்பதை அச்சொட்டாக உணர்த்தி நிற்கிறது.

உண்மை நிலவரம், சுற்றும் நிலவும் சூழ்நிலை, பிறருடைய அறிவுரை, பிறரின் கருத்துக்கள் எது எப்படியிருந்தாலும், 'தன்'மனதுக்கு எது எப்படித் 'தோன்று'கிறதோ அதையே பிடிவாதமாகச் செய்யும் குணாதிசயத்தை குறிப்பிடும்போது 'தான்தோன்றித்தனமாக' என்பர்.

இவ்வாறான தான்தோன்றித்தனமான முடிவு மக்களின் மீது மற்றுமொரு சுமையை திணித்துவிட்டது. எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்குமாயின், ஒவ்வொரு பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் கட்டாயமாக அதிகரிக்கும்.

பொதுப் போக்குவரத்து சேவைகள் சீராக இன்மையால், பலரும் ஓட்டோக்களை நம்பவேண்டிய நிலையில் நிற்கின்றனர். அவ்வாறானவர்களின் செலவு இரட்டிப்பாகப் போகிறது. இவற்றுக்கெல்லாம் அரசாங்கம் பதில்கூற கடமைப்பட்டிருக்கின்றது.

அனுமதியைப் பெறாமல் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, உரிய தரப்பினர் முன்வரவேண்டும்.

ஐ.ஓ.சி நிறுவனத்தின் கீழிருக்கும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில், எரிபொருட்களை நிரப்பாதவர்கள் கூட, எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டன எனக்கூறி, கட்டணங்களை அதிகரித்துக்கொள்வர். இவையெல்லாமே சாதாரண மக்களின் மீதான சுமையை பன்மடங்கில் அதிகரிக்கும்.

நிறுவனங்கள் தான்தோன்றித்தனமாக செயற்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது. தான்தோன்றித்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முறையான பொறிமுறையொன்று அரசாங்கத்திடம் இருத்தல் அவசியமாகும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நடக்கவேண்டிய காரியம் நடப்பதற்காக எல்லாமே செய்வார் கடவுள். எந்தக் காரியங்களையும் தீர்மானிப்பது எல்லாம் வல்ல சக்திதான்.

தான் செய்யும் கர்மா மீள வரும். குற்றங்களில் இருந்து தப்பிக்க முடியாது. புவனத்தைச் சிதைப்பவர்கள், அதனை எண்ணுபவர்களுக்கு எதிர்வினைகள் தாக்கிவிடும்.

உலகிலேயே வாழ்ந்து அதற்கு எதிராக இயங்க முடியாது. எதிர்பாராத திருப்பங்களை இந்த வையகத்தில் நீங்கள் பார்த்தபடியே இருக்கின்றீர்கள்.

உவகைக் கட்டும் பாட்டுக் கருவி இறை சக்தியேயாகும். மமதை மனதை மயக்கி விடுகின்றது.

உலகம் விரும்பாத பல காரியங்களையே அநேகர் பிரியப்பட்டும் வாழ்வதுண்டு. விலக்க வேண்டியதை விலக்காது நெஞ்சில் பாரத்தை சுமப்பது பழக்கமாகிவிட்டது.

எதனையாவது நினைத்து உருகி, மயங்கிச் சோர்ந்து வாழ்பவர்கள் கூட அதனை விலக்கிட விருப்பப்படாமல், சோகமே சுகமானது என வாழ்பவர்களை நீங்கள் கண்டு இருப்பீர்கள். இத்தகையவர்கள் சந்தோஷத்தை விரும்பாதவர்களாக, மாயையில் புகுந்துள்ளவர்களாவர். ஒளி மிகுந்த வாழ்வை நோக்கி இயங்குவது சிரமம் அல்ல.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மின்வெட்டும் அரசியலும்



என்.கே.அஷோக்பரன்
@nkashokbharan

கடந்தவாரத்தில், ஒரு நாளைக்கு ஏறத்தாழ 5 மணித்தியாலங்கள் அளவு வரை இலங்கையின் மினதுண்டிப்பு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களின் பின் பெரும் மின்சார பற்றாக்குறை நிலையை இலங்கை எதிர்கொண்டு நிற்கிறது. இந்த நிலைவரக் காரணம் என்ன? குறுங்காலக் காரணம், இலங்கையிடம் பெற்றோலிய எரிபொருள் வாங்க போதிய டொலர்கள் இல்லை. ஆகவே இந்தியா உள்ளிட்ட சில நாடுகளிடம் கடன்வசதிகளைப் பெற்றுக்கொண்டு பெற்றோலிய எரிபொருட்கள் இறக்குமதிசெய்தி வருகிறது.

கிடைக்கும் பெற்றோலிய எண்ணையை,போக்குவரத்திற்கு அதனை ஒதுக்குவதா, அல்லது பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு பெருமளவில் கடன் செலுத்தவேண்டிய நிலையிலுள்ள இலங்கை மின்சார சபைக்கு அதனை வழங்குவதா என்ற கேள்வி எழுவதிலிருந்துதான் இலங்கையின் இன்றைய மின்பற்றாக்குறை பிரச்சினை தொடங்கியது எனலாம். கடனுக்கு வாங்கிய பெற்றோலியத்தை, கடனுக்கு வழங்கினால், மீண்டும் பெற்றோலியம் வாங்க மீண்டும் கடன் வாங்க வேண்டும். இது ஒரு விஷச்சக்கரம். இந்த முட்டுச்சந்தில்தான் இலங்கை முட்டிமோதி நிற்கிறது.

இது நிலைமையை மோசமாக்கிய குறுங்காலக் காரணம்தான். இதற்கெல்லாம் வழிவகுத்த நீண்டகாலக் காரணத்தை, அதாவது நோய்கான காரணத்தைப் பற்றி யோசிப்பது மிக முக்கியம். நீண்டகாலக் காரணம், இலங்கையின் அறமற்ற அரசியலும், கொள்கைப் பிழைகளும்தான். இலங்கையின் மின்சாரத் துறை என்பது அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழுள்ளதொன்று. அண்மைத் தசாப்தங்களில் தனியார் துறைக்கு மின்பிறப்பாக்க அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது உண்மை, ஆனால் மின் வழங்கல் என்பது அரசாங்கத்தின் தனியுரிமையிலேயே இருக்கிறது. இலங்கை மின்சாரத்துறையை பெருமளவில் கொண்டுநடத்துவது இலங்கை மின்சார சபை. 2010 முதல் 2019 வரையிலான 10 வருட காலப்பகுதியில், இலங்கை மின்சார சபையின் மொத்த நட்டம் ரூ. 246 பில்லியன். கடந்த இரண்டு ஆண்டுகளில் மேலும் பல பில்லியன்கள் நட்டத்தை இலங்கை மின்சார சபை அடைந்துள்ளது.

மின்சாரம் என்பது அனைத்து நுகர்வோருக்கும் தேவைப்படும் ஒன்று. உலக அளவில் மின்சக்தி பிறப்பாக்கம் மற்றும் வழங்கல் என்பன பெரும் இலாபம் தரும் வியாபாரம். இலங்கை மின்சார சபை, இலங்கையின் மின்துறையில் கிட்டத்தட்ட தனியுரிமை கொண்டுள்ளது. அப்படியானால் அது ஏன் நட்டத்தில் இயங்குகிறது? இதற்கு காரணம் இலங்கையின் அரசியலும், அதன்பாலான நிர்வாகச் சீர்கேடுகளும்தான். ஒரே ஒரு உதாரணம் இதற்குப் போதும். அண்மையில் சமூக ஊடகங்களில் வெளிவந்த தகவல்களின் படி, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல 2015ல் இருந்து தனது வீட்டிற்கான மின்கட்டணம் கட்டாமல் இலங்கை மின்சார சபைக்கு மீதம் வைத்துள்ள தொகை ஒரு கோடியே இருபது லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று மூன்று ரூபாய்களும் முப்பத்தெட்டு சதங்களும்! ஒரு சாதாரண குடிமகன் இரண்டாயிரம் ரூபாய் மின்கட்டணத்தை இரண்டு மாதங்கள் கட்டாமல் விட்டாலே மின்சாரத்தை துண்டிக்கும் மின்சார சபை, அமைச்சருக்கு மட்டும் கோடிக்கணக்கில் கருணை காட்டுகிறது. இப்படி மாறி மாறி கருணை காட்டினால், மின்பிறப்பாக்கத்திற்குத் தேவையான எரிபொருள் வாங்க மின்சார சபையிடம் எப்படிப் பணம் இருக்கும்?

இந்த இடத்தில் இன்னொரு கேள்வி வருகிறது. நீர்மின்னுற்பத்தி, சூரியசக்தி மின்னுற்பத்தி, காற்றாலை மின்னுற்பத்தி என மின்னுற்பத்தி செய்யத்தக்க இலங்கை ஏன் பெற்றோலிய எரிபொருள் மூலமான மின்னுற்பத்தியில் பெரிதும் தங்கியிருக்கிறது? 1995 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை நாட்டின் மின்சார உற்பத்தியில் கிட்டத்தட்ட 100% நீர்மின்சாரமே பங்களித்தது. எவ்வாறாயினும், இலங்கையின் மின்சார உற்பத்தியில் நிலக்கரி மற்றும் அதிக விலையுயர்ந்த எண்ணெய் மூலமான மின் உற்பத்தியின் பங்களிப்பு கடந்த இரண்டு தசாப்தங்களாக மின்சார தேவையின் விரைவான அதிகரிப்பு மற்றும் பெரிய புதிய நீர் மின் வசதிகளை உருவாக்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட சாத்தியக்கூறுகளால் பல ஆண்டுகளாக தொடர்ச்சியான உயர்வைக் கண்டுள்ளது. இந்த மாற்றம் செலவுகளை கணிசமாக அதிகரித்துள்ளது. இன்றும் மிகக் குறைந்த செலவிலான மின்னுற்பத்தி நீர் மின்னுற்பத்தியாகவே இருக்கிறது. ஆனால் நீர்மின் நிலையங்களின் பங்களிப்பு வானிலை நிலைமைகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியது. இது வெவ்வேறு ஆண்டுகளில் அதன் பங்களிப்பில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறது. மழை நன்கு பெய்யும் ஆண்டுகளில், நீர்மின் உற்பத்தியானது இலங்கை மின்னுற்பத்தியில் 40%க்கு மேல் கூட அதிகரிக்கிறது. ஆனால் வறண்ட ஆண்டுகளில், நீர்மின் உற்பத்தியில் உள்ள இடைவெளியைக் குறைக்க எண்ணெயில் இயங்கும் அனல் மின் நிலையங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன

மறுபுறத்தில் சூரியசக்தி மின்பிறப்பாக்கம் பற்றி இன்னும் இலங்கை தீவிரமாகச் சிந்திக்கவேயில்லை. அதைப்பற்றி சிந்திப்பது அவசியம். முறையான திட்டத்தை இலங்கை முன்னெடுத்தால் சூரியசக்தியிலிருந்து இலங்கை இன்னும் பலன்பெறும். தென், வட மத்திய, வட மேல் மாகாணங்கள் ஆகிய பகுதிகளில் சூரியசக்தி மின்பிறப்பாக்க பூங்காக்கள் அமைத்தாலே அது இலங்கையின் மின்தேவையின் கணிசமான பங்கை பூர்த்தி செய்யும். இதற்கான மூலதனம் அதிகம். ஆனால் நீண்டகாலத்தில் அதற்கேற்ற பலனை அது தரும். இது மிகத் தூய்மையான சக்தி என்பதனையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

> **ஆனால் இதுவரை இவையெல்லாம் பேச்சளவிலேயே நிற்கின்றன. இன்று உலகளவில் ரஷ்யா சந்தித்து நிற்கு தடைகளால், இதனுடைய உடனடி சாத்தியப்பாடுகள் எல்லாம் கேள்விக்குறியே**

மேலும் இலங்கையில் பரவலாக அமைந்துள்ள சிறிய நீரூற்றுக்களில், மின்பிறப்பாக்கம் செய்யக்கூடிய சிறிய நீர்மின்நிலையங்களை அமைக்க இலங்கை அரசாங்கம் தனியார் துறைக்கு ஊக்கமும், அனுமதியுமளித்தால். அப்படி ஒரு 100 - 200 சிறிய நீர்மின்பிறப்பாக்க நிலையங்கள் உருவானால் அது இலங்கையின் மொத்த மின்னுற்பத்திக்கு இன்னொரு 300 - 400 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும்.

இலங்கை அணுமின்னுற்பத்தி பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று கருத்துரைப்போரும் உளர். 2010ல் இலங்கை அரசாங்கமானது, 2030 அளவில் 1000 மெகாவோட் மின்பிறப்பாக்கும் அணுமின்னிலையத்தை 2030 அளவில் அமைக்கத் திட்டமிட்டிருந்தது. 2018, இலங்கையில் அணுமின்னிலையம் அமைப்பது பற்றி இலங்கை ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. ரஷ்யா, இலங்கையில் அணுமின்னிலையமொன்றை ஒருநாள் அமைக்கும் என்று 2020ல் இலங்கைக்கான ரஷ்ய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இதுவரை இவையெல்லாம் பேச்சளவிலேயே நிற்கின்றன. இன்று உலகளவில் ரஷ்யா சந்தித்து நிற்கு தடைகளால், இதனுடைய உடனடி சாத்தியப்பாடுகள் எல்லாம் கேள்விக்குறியே. அணு மின்சாரம் என்பது உமிழ்வு இல்லாத சுத்தமான சக்தி மூலமாகும். இது பிளவு மூலம் சக்தியை உருவாக்குகிறது. இது ஆற்றலை உற்பத்தி செய்ய யுரேனியம் அணுக்களை பிரிக்கும் செயல்முறையாகும். பிளவு மூலம் வெளியிடப்படும் வெப்பம், பெற்றோலிய எரிபொருட்களால் வெளிப்படும் தீங்கு விளைவிக்கும் துணைப் பொருட்கள் இல்லாமல் மின்சாரத்தை உருவாக்க வழிவகுக்கிறது. ஆனால் அணுமின்னிலையத்தின் பாதுகாப்பு, கதிர்வீச்சு ஆபத்துக்கள் போன்ற சிக்கல்கள் அணுமின்னிலையத்தில் உள்ளது. ஆனால் நாட்டில் மின் தேவை பூதாகரமாக அதிகரித்து வரும் நிலையில், இலங்கை அணுமின்னுற்பத்தியைப் பற்றி சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கை மின்சார சபை என்ற தனியுரிமையை சீரமைப்பது அவசியமாகிறது. இலாபத்தில் இயங்க வேண்டிய ஒரு துறையை, பல பில்லியன்கள் நட்டத்தில் இயங்க வைத்துக் கொண்டிருப்பது என்பது நிர்வாகச் சீர்கேட்டையே சுட்டிக்காட்டி நிற்கிறது. மின்பிறப்பாக்க கப்பல்களை வரவழைத்து, அதில் பெற்றோலிய எரிபொருள் மூலம் பிறப்பிக்கப்படும் மின்சாரத்தை பல மடங்கு விலைகொடுத்து வாங்கும் காரியமும் இலங்கையில் அரங்கேறியிருக்கிறது! இப்படி எத்தனையோ "டீல்களைப்" பட்டியலிடலாம். அரசாங்கத்தின் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை, மின்சாரத்துறையின் நிர்வாக சீர்கேடு என்பது தொடரவே செய்யும். இந்த நிலையை மாற்றியமைப்பது அவசியம்.

அடிப்படைகளை மாற்றாமல், கொள்கைகளை மாற்றாமல், கட்டமைப்புக்களை மாற்றாமல் இந்த நோயைத் தீர்க்க முடியாது. கடனெடுத்து இன்று மின்சாரத்தை உற்பத்தி செய்து, இன்றைய தினத்தைக் கடத்திவிடலாம். ஆனால் இப்படி எத்தனை நாட்கள் சமாளிக்க முடியும்? கடனெடுக்க முடியாத நிலைவந்தால், அத்தியாவசிய சேவைகள் தாண்டி வேறு எதற்கு மின்சாரம் இல்லாத இருண்ட யுகத்தையே நாம் நிதர்சனத்தில் அனுபவிக்க வேண்டி வரும். இன்றை நிலையில் அது வெறும் பயங்கரமான கற்பனையல்ல, யதார்த்தத்தில் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவே இருக்கின்றன.

## கடிதங்கள்

### மீள இயங்க செய்யவும்

முல்லைத்தீவு -ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழி -ற்சாலையை மீளவும் இயங்க வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை, கடந்த கால யுத்தம் காரணமாக சேதமடைந்து, செயலிழந்து காணப்படுவதனால் இதனை நம்பி வாழ்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள், பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

மக்கள் மீள்குடியேறி 12 வருடங்களாகியும் இதனை இயங்க வைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

1968 மே 20 திறந்து வைக்கப்பட்டதுடன் அக்காலத்தில் 74 நிரந்தர, நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிக பணியாளர்களும் கடமையாற்றி வந்தனர். 200க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வழங்கிய ஒட்டுத்தொழிற்சாலை, 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக செயலிழந்தது.

2003ம் ஆண்டு முதல் மீள இயங்கிய போதும் இறுதி யுத்தகாலத்தில் செயலிழந்து போனது. எனினும், இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தினால் 2018ம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்டு புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் அதன் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை.

(சுப்ரமணியம் பாஸ்கரன்)






# கொமர்ஷல் வங்கியினால் சிறுவர் ஓவியர்களுக்கு விருது

கொமர்ஷல் வங்கியின் அருணலு சித்தம் ஓவியப் போட்டியின் வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு பணம் மற்றும் சான்றிதழ்களை பரிசாக பெற்றுள்ளார். ஐந்து வெவ்வேறு வயதுப் பிரிவுகளில் நான்கு பிரிவுகளில் இருந்து தெரிவான முன்னணி வெற்றியாளர்களில் 12 இளம் ஓவியர்கள் வங்கியால் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட வைபவத்தில் தமக்கான பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

'அருணலு சித்தம் சிறுவர் ஓவியப் போட்டி 2021' எனும் தொனிப் பொருளில் இந்தப் போட்டியை கொமர்ஷல் வங்கி நடத்தியது. இது இந்தத் தொடரின் இரண்டாவது போட்டியாகும். கடந்தாண்டு ஒக்டோபரில் 4 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்து வெவ்வேறு பிரிவுகளில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 'எமது வாழ்வுமுறை' (கனிஷ்ட பிரிவு) 'இயற்கையின் கொடைகள்' (சிரேஷ்ட பிரிவு) என்பனவே கொடுக்கப்பட்ட தலைப்புக்கள். ஓவியங்களை அனுப்புவதற்காக கொடுக்கப்பட்ட கால எல்லை 2021 நவம்பர் 25 வரை. முன் பள்ளி (4 முதல் 5 வயது) ஆரம்ப பிரிவு (6 முதல்7 வயது) பின் ஆரம்பம் (8 முதல் 10 வயது) கனிஷ்ட பிரிவு (11 முதல் 13 வயது) சிரேஷ்ட பிரிவு (14 முதல் 16 வயது) என்பனவே போட்டிக்கான வயதுப் பிரிவுகளாகும்.

நான்கு சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை வென்றவர்களே பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தில் பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். முறையே ரூ. 1 லட்சம், ரூ. 75 ஆயிரம் மற்றும் ரூ. 50 ஆயிரம் என பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட முன்பள்ளிப் பிரிவில் வெற்றி பெற்ற 25 இளம் கலைஞர்களும் தலா பத்தாயிரம் ரூபாய் பணப்பரிசு மற்றும் சான்றிதழ் என்பனவற்றையும் இன்னும் 50 வெற்றியாளர்கள் தமக்கான ஆறுதல் பரிசாக சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்வர். மேலதிகமாக ஒவ்வொரு வயதுப் பிரிவையும் சேர்ந்த 25 போட்டியாளர்கள் பத்தாயிரம் ரூபாய் பணப்பரிசையும், ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த 50 போட்டியாளர்கள் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்வர் என வங்கி அறிவித்துள்ளது.

ஏனையவர்கள் தமக்குரிய சான்றிதழ்களை அவர்களுக்கு அருகில் உள்ள கொமர்ஷல் வங்கி கிளையில் இருந்து பெற்றுக் கொள்வர். மற்றவர்களுக்கு அவர்கள் வென்ற தொகை அவர்களது அருணலு கணக்கில் வைப்பிலிடப்படும். இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் மத்தியில் மொத்தம் 25 இலட்சம் ரூபாய் பரிசாகப் பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

வெற்றியாளர்களைத் தெரிவு செய்த நடுவர் குழு பேராசிரியர் ஸ்ரீபால மாலிம்பொட கற்புல அரங்கற் கலை பல்கலைக்கழகத்தின் (VPA) ஓய்வு பெற்ற முன்னாள் பீடாதிபதி மற்றும் இலங்கை அரச கலைப்பேரவையின் உறுப்பினர், திருமதி தீபா அலஹக்கோன் புத்தாக்க ஆலோசனைப் பணிப்பாளர் (விளம்பரம்) மற்றும் வருகை தரும் விரிவுரையாளர் (VPA), லால் ஜயசேகர சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் VPA அச்சுக்கலைப் பிரிவு திணைக்களத் தலைவர், சஞ்சய செனவிரட்ண தொழில்சார் ஓவியர் மற்றும் VPA பட்டதாரி, திருமதி இனோக்க எதிரிசிங்க வடமேல் றோயல் கல்லூரியின் ஓவிய ஆசிரியை மற்றும் VPA பட்டதாரி ஆகியோரை உள்ளடக்கியதாக இருந்தது.




யூனியன் அஷ்யூரன்ஸ்

# Circle of Excellence மீள அறிமுகம்

யூனியன் அஷ்யூரன்ஸ் *Circle of Excellence*, உயர்ந்த மற்றும் சிறந்த வெகுமதிகளுடன் மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தில் சிறப்பாக செயலாற்றும் காப்புறுதி உறவு பேண் அதிகாரிகள் (IROs), பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் வலய முகாமையாளர்களுக்கு வெகுமதியளிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த மீள அறிமுகம் தொடர்பாக யூனியன் அஷ்யூரன்ஸின் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் காணப்படும் மாபெரும் பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் வகையில், எமது மாபெரும் சொத்தாக எமது ஊழியர்கள் அமைந்துள்ளனர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எமது உயர்ந்த வெகுமதிகள் மற்றும் கௌரவிப்பு திட்டத்தை தொடர்ந்தும் சர்வதேச நியமங்களுக்கமைய முன்னெடுக்கும் வகையில் *The Circle of Excellence* மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்கும் எமது பெறுமதி வாய்ந்த ஊழியர்களின் கடின உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் சிறந்த வெகுமதிகளைப் பெற்றுக் கொடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் *Circle of Excellence* இனால் பரந்தளவு நிதியியல், வாழ்க்கை முறை, கௌரவிப்பு, திறன் விருத்தி மற்றும் அங்கத்துவ வெகுமதிகள் போன்றன வழங்கப்படுகின்றன. வழங்கப்படும் பரந்தளவு அனுகூலங்களில் சொகுசு வாகனங்கள், வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள், பெருமளவான பணக் கொடுப்பனவு வெகுமதிகள், பிரத்தியேகமான பயிற்சி மற்றும் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தொழில் நிலை முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் மற்றும் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய *Circle of Excellence* வாணிபப் பொருட்கள் போன்றன அடங்கியுள்ளன.

சிறப்பாக செயலாற்றுவோருக்கு வெகுமதியளிப்பதுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மற்றும் ஆர்வத்துடன் செயலாற்றும் செயலணியினரை கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும் என்பதுடன், வாடிக்கையாளர்களின் தேவை மதிப்பாய்வுகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பது மற்றும் கொள்முதலை மேம்படுத்தும் வகையிலான சேவை விநியோகம் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனையாளர் அனுபவத்தை சிறப்படையச் செய்வது போன்றவற்றை கௌரவிக்கக்கூடியதாக இருக்கும்.

மேலும், 2021 ஆம் ஆண்டில் காப்புறுதி உறவு பேண் அதிகாரிகளுக்கு சாதனை மிகுந்த செயற்திறனை பதிவு செய்வதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் *Circle of Excellence* வெகுமதியளிக்கும் திட்டமாக அமைந்திருந்தது. அதனூடாக நிறுவனத்துக்கு 300 MDRT தகைமையாளர்களை பதிவு செய்து, தொழிற்துறையில் முன்னோடி எனும் நிலையை எய்தக்கூடியதாக இருந்தது.

பல கௌரவிப்புகளை தன்வசம் கொண்டுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பாங்கசூரன்ஸ் பிரிவு, கடந்த காலங்களில் சிறந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், நாட்டில் காணப்படும் முதல் தர பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் நிலையை எய்தியுள்ளது. நாட்டின் முன்னணி வங்கிப் பங்காளர்களின் 360 க்கும் அதிகமான வங்கிக் கிளைகளை உள்வாங்கி செயலாற்றுகின்றது.

மணிப்பூர்

# மணிப்பூரில் குண்டுவெடிப்பு; அச்சத்தில் மக்கள்

60 சட்டசபைத் தொகுதிகளைக் கொண்ட மணிப்பூர் மாநிலத்தில் இன்றும்(28) மார்ச் மாதம் 6 ஆம் திகதியும், 2 கட்டங்களாக வாக்களிப்பு நடைபெற உள்ளது.

இந்நிலையில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் (26) நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல்களில் 2 பேர் பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூரில் சர்ச்சந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள கேங்க் பிமுல் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டிலேயே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இக் குண்டுவெடிப்பில் குழந்தையொன்று உட்பட 7 பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அதில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை

## குழந்தையின் உயிரைப் பறித்த 'ஏசி'

இரண்டு வயதான குழந்தையொன்றின் உயிரை வீட்டில் வைக்கப்பட்டிருந்த குளிரூட்டி ( ஏசி) பறித்த சோக சம்பவம் சென்னை, பல்லாவரத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தனமான நேற்று முன்தினம்(26) அக் குழந்தையின் தாய் குழந்தையைப் படுக்கையறையில் உறங்க வைத்துவிட்டு, வீட்டு வாசலில் அமர்ந்து பூமாலை கட்டிக் கொண்டு இருந்ததாகவும், இதன் போது எதிர்பாராத விதமாக வீட்டில் தீப்பரவல் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து வீடு முழுவதும் தீ பரவியதால் குழந்தையை மீட்க முடியாமல் தாய் தடுமாறியதாகவும், அதன் பின்னர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தீயணைப்பு துறையினர் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டதாகவும், எனினும் குழந்தை தீயில் கருகி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் "படுக்கை அறையில் வைக்கப்பட்டிருந்த குளிரூட்டியில் ஏற்பட்ட மின்கசிவே இத் தீவிபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சேலம்

## உலகின் உயரமான முருகன் சிலை

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள சேலம் - சென்னை தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் சுமார் 145 அடி உயரத்தில் முருகன் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இச்சிலையானது மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள பத்துமலை முருகன் சிலையை விட 5 அடி உயரம் கொண்டது எனவும், கும்பாபிஷேகம் நடைபெற்று இச் சிலை திறக்கப்பட்டால், இதுவே உலகின் மிக உயரமான முருகன் சிலையாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

மேலும் இச்சிலையின் கட்டுமானப் பணிகள் கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோயில் நிர்வாகி ஸ்ரீதர் கூறுகையில், "எனது தந்தை முத்துநடராஜன் கடந்த 2016 ஆம் ஆண்டு முருகன் சிலை அமைப்பதற்கான ஏற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். இச்சிலை வடிவமைப்பு பணி, மலேசியா பத்துமலை முருகன் சிலையை வடிவமைத்த தமிழகத்தைச் சேர்ந்த திருவாரூர் தியாகராஜன் ஸ்தபதி தலைமையில் நடைபெற்றது" என்றார்.

அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி இதன் கும்பாபிஷேகம் நடைபெறும் எனவும், கும்பாபிஷேகத்தில் தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள், உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



புதுடெல்லி

## காரில் செல்வோருக்குப் புதிய சலுகை

அண்மைக் காலமாக கொரோனாத் தொற்றுப் பரவலினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு மாநிலங்களிலும் கொரோனாக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, பாடசாலைகளிலும் நேரடி வகுப்புகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது உள்ளிட்ட கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் காரில் முகக் கவசம் அணியாமல் செல்வோருக்கு அபராதம் விதிக்கப்படாது எனவும், பொது இடங்களில் முகக் கவசம் அணியாதவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை 2,000 ரூபாயிலிருந்து 500 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



தெலுங்கானா

தெலுங்கானா விமான விபத்தில்

## சென்னை பெண் விமானி உயிரிழப்பு



தெலுங்கானாவில் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதனை இயக்கிய பெண் விமானியான சென்னையை சேர்ந்த சேர்ந்த மகிமா கஜராஜ் (வயது 29) உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐதராபாத்தை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும்

தனியார் விமான பயிற்சி நிறுவனமொன்றில், விமானிக்கான பயிற்சியை அப்பெண் பெற்றுவந்தார்.

அந்த விமான பயிற்சி நிறுவனத்துக்கு சொந்தமான 'செஸ்னா 152' ரக விமானத்தில் ஆந்திராவின் குண்டூர் நகரில் இருந்து தெலுங்கானாவின் நல்கொண்டா மாவட்டத்துக்கு நேற்று முன்தினம்(26) காலை சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 இருக்கைகளைக் கொண்ட அச் சிறிய விமானத்தில் பயிற்சி விமானியான மகிமா மட்டுமே பயணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திடீரென கட்டுப்பாட்டை இழந்த விமானம் அங்குள்ள வெற்றுக் காணியொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. இக் கோர விபத்தில் மகிமா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தை அடுத்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார். " தெலுங்கானா மாநிலத்தில் நடந்த விமான விபத்தில் சென்னையைச் சேர்ந்த பயிற்சி விமானி மகிமா உயிரிழந்த செய்தியறிந்து வேதனை அடைந்தேன். அவரது குடும்பத்தினர் உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கெதிரான

# தொடரை இழந்தது இலங்கை

இந்தியாவுக்கு எதிரான ருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை இழந்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியில் ஏற்கெனவே தோற்றிருந்த இலங்கை, தரம்சாலாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் தோற்றதைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை இழந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, தனுஷ்க குணதிலகவின் 38 (29), பதும் நிஸங்கவின் 75 (53) ஓட்டங்களோடு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றதுடன், அணித்தலைவர் தசுன் ஷானகவின் ஆட்டமிழக்காத 47 (19) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 4-0-24-1, யுஸ்வேந்திர சஹால் 4-0-27-1, புவ்னேஷ்வர் குமார் 4-0-36-1, இரவீந்திர ஜடேஜா 4-0-37-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 184 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஷர்மா, இஷன் கிஷனை துஷ்மந்த சமீர, லஹிரு குமாரவிடம் இழந்தபோதும், ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 74 (44), சஞ்சு சாம்ஸனின் 39 (25), இரவீந்திர ஜடேஜாவின் ஆட்டமிழக்காத 45 (18) ஓட்டங்களோடு 17.1 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷ்ரேயாஸ் ஐயர் தெரிவானார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் யுனைட்டெட் வட்:.போர்ட் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், வட்ஃபோர்ட்டுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றிருந்தது. சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை பில் பொடென் பெற்றிருந்தார்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 66 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் சிற்றி உள்ளது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள லிவர்பூல் 60 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ள செல்சி 50 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், 47 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் யுனைட்டெட் காணப்படுகின்றது.



கந்தையா வெற்றி கிண்ண கால்பந்தாட்டத் தொடரில்

## சம்பியனானது புத்தளம் செல்சி

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளத்தில் நடைபெற்ற அணிக்கு "கந்தையா வெற்றி கிண்ணத்துக்கான" கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் செல்சி அணி சம்பியனாகியுள்ளது.

தலா ஒன்பது வீரர்களை கொண்ட 16 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், குளியாப்பிட்டி பம்பன்ன ஷார்ஜா கால்பந்தாட்டக் கழகத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே செல்சி சம்பியனானது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை, எம். சபாக் பெற்றார்.

சிறந்த கோல் காப்பாளராக பம்பன்ன ஷார்ஜா அணியின் வீரர் எம். நப்சானும், சிறந்த வீரராக புத்தளம் செல்சி அணி வீரர் எம்.எஸ்.எம். பர்மானும் தெரிவாகினர்.

சம்பியனான செல்சி வெற்றிக் கிண்ணத்துடன் 30,000 ரூபாய் வழங்கப்பட்டதுடன், இரண்டாமிடம் பெற்ற ஷார்ஜா கால்பந்தாட்டக் கழகதுக்கு கிண்ணத்துடன் 20,000 ரூபாய் வழங்கப்பட்டது.

இறுதிப் போட்டிக்கு, புத்தளம் நகர சபைத் தலைவரும், புத்தளம் கால்பந்தாட்ட லீக் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக் அதிதியாகக் கலந்து கொண்டார்.

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் தென்னாபிரிக்கா

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா முன்னிலையில் காணப்படுகின்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, சரெல் எர்வீயின் 108, ஏய்டன் மார்க்ரமின் 42, அணித்தலைவர் டீன் எல்கரின் 41, மார்கோ ஜன்சனின் ஆட்டமிழக்காத 37, கேஷவ் மஹராஜ்ஜின் 36, றஸி வான் டர் டுஸனின் 35, தெம்பா பவுமாவும் 29 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நீல் வக்னர் 4, மற் ஹென்றி 3, கைல் ஜேமிஸன் 2, டிம் செளதி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், கொலின் டி கிராண்ட்ஹொம் ஆட்டமிழக்காமல் 120, டரைல் மிற்செல் 60, ஹென்றி நிக்கொல்ஸ் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ககிஸோ றபாடா 5, மார்கோ ஜன்சன் 4, கேஷவ் மஹராஜ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து, நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், கைல் வெரைன் 22, வியான் முல்டர் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக, 45 ஓட்டங்களுடன் றஸி வான் டர் டுஸன் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில், டிம் செளதி 2, நீல் வக்னர் 2, மற் ஹென்றி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

செட்டிகுளம் பிரதேச பொது அமைப்புகள், விளையாட்டு கழகங்களுக்கான

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் சென்றாண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பொது அமைப்புகள் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், கிரிக்கட் சீருடைகள் வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.



செட்டிகுளம் பிரதேச செயலக பிரதேச செயலாளரின் பங்கேற்புடன் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

## உக்ரேனுடன் கை கோர்ப்பு

எதிர்வரும் நாட்களில் ரஷ்யாவின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் உக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்க அவுஸ்திரேலிய அரசு முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அந்நாட்டு பிரதமர் ஸ்காட் மோரிசன் " உக்ரேனுக்கு அவுஸ்திரேலியா துணை நிற்கும். உக்ரேனுக்கு அவுஸ்திரேலியா மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகிறது. தற்போது அகதிகளுக்கும் உதவிகள் வழங்கப்படும்" என்றார்.

மேலும் "ஆரம்பத்தில உயிர்சேதம் விளைவிக்காத ஆயுதங்களை உக்ரேனுக்கு அனுப்ப முடிவு செய்திருந்தோம். தற்போது பல கட்ட ஆலோசனைகளுக்குப் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் மூலமாகவும், நேட்டோ படைகளின் மூலமாகவும், உயிர்சேதம் விளைவிக்கக் கூடிய அதிநவீன போர் ஆயுதங்களை உக்ரேனுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





## ஹெலிகொப்டரில் தொங்கியபடி உடற் பயிற்சி

### வைரலாகும் வீடியோ

இளைஞர் ஒருவர் ஹெலிகொப்டரில் தொங்கியபடி ' புல்லப் அப்' செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

ஆர்மேனிய நாட்டை சேர்ந்தவர் ரோமன் சஹ்ரதன் (Roman Sahradan ) என்ற இளைஞரே இவ்வாறு வானில் பறந்து கொண்டிருக்கும் ஹெலிகொப்டரில் தொங்கியவாறு தொடர்ந்து 23 தடவைகள் புல்லப் அப் செய்து சாதனை படைத்துள்ளார்.

மேலும் இவரது சாதனை கின்னஸ் புத்தகத்தின் அதிகாரபூர்வ இணையபக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்



## உக்ரேனுக்கு எலான் உதவிக் கரம்

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரேன் மீது ரஷ்யா தொடர்ந்து 4ஆவது நாளாகத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் ரஷ்யப் படையினரால் உக்ரேனில் இணைய சேவைகள் வழங்கி வந்த நிறுவனங்களின் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், தங்கள் நாட்டிற்கு இணைய சேவை வழங்குமாறு உக்ரேனின் துணை பிரதமர் மைக்கைலோ பெடோரோவ், உலகின் மிகப்பெரிய செல்வந்தர்களில் ஒருவரான எலான் மஸ்கிடம் கோரிக்கை விடுத்தார்.

இந் நிலையில் உக்ரேனுக்கு உதவும் வகையில் "தனது நிறுவனமான 'ஸ்டார்லிங்க்' மூலம் இணைய சேவையை உக்ரேனுக்கு வழங்குவதாக" எலான் மஸ்க் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியா



## மாணவர்களின் ஸ்மார்ட் போன்களுக்குத் தீ

மாணவர்களின் ஸ்மார்ட் தொலைபேசிகளை அவர்கள் கண்முன்னே ஆசிரியர்கள் தீயில் இட்டு எரித்த வீடியோவொன்று இணையத்தில் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வீடியோவில் " மாணவர்கள் தமது தொலைபேசிகளை தீயில் போடாதீர்கள் என்று கதறி அழுவதும், ஆசிரியர்கள் அவற்றை கண்டுகொள்ளாமல் தீயில் வீசுவது போன்றும்" காணப்படுகின்றது.

எனினும், குறித்த சம்பவம் இந்தோனேசியாவில் எப்போது எங்கு இடம்பெற்றது என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை

இந்நிலையில், இச்சம்பவத்திற்கு ஆதரவு தெரிவித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா

## 'ஸ்விப்ட்' இல் இருந்து ரஷ்யா நீக்கம்

உக்ரேன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் 'ஸ்விப்ட்' (swift) வங்கி பரிவர்த்தனை முறையில் இருந்து ரஷ்ய வங்கிகளை நீக்கியுள்ளது.

SWIFT என்பது உலகளாவிய வங்கிகளுக்கு இடையேயான நிதி தொலைத்தொடர்புகள்ளுக்கான சமூகம் ஆகும். பணப் பரிமாற்றங்கள் போன்ற உலகளாவிய பணப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ள நிதி நிறுவனங்களுக்கு பாதுகாப்பான தளமாகும்.

இது 200 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 11,000 க்கும் மேற்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையே உள்ளக செய்தியிடல் அமைப்பாக செயல்படுகிறது.

அத்துடன் பெல்ஜியத்தை தளமாகக் கொண்ட இந்நிறுவனம், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராஜியம் மற்றும் அமெரிக்கா


உக்ரேன்

## முக்கிய பகுதிகளை கைப்பற்றியது ரஷ்யா

உக்ரேன் மீது ரஷ்ய படைகள் வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதன் காரணமாக உக்ரேனில் இதுவரை 3 குழந்தைகள் உட்பட 198 பேர் இதுவரை உயிரிழந்து உள்ளனர் எனவும், 33 குழந்தைகள் உட்பட 1,115 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு சுகாதார அமைச்சர் விக்டர் லியாஷ்கோ (Viktor Liashko) தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில், ரஷ்ய இராணுவம், உக்ரேனின் 975 இராணுவத்தளங்களை அழித்துள்ளதாகவும், உக்ரேன் இராணுவ வீரர்கள் 471 பேரை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் உக்ரேனின் அதிக மக்கள்தொகை கொண்ட இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் நகரில் ரஷ்ய இராணுவத்தினர் நுழைந்து தொடர் தாக்குதல் நடத்தி வந்த நிலையில் தற்போது உக்ரேனில் நோவா, ககோவ்கா உட்பட இரு நகரங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தெற்கு மற்றும் தென் கிழக்கில் தொடர்ந்து, ரஷ்ய படைகள் முன்னேறி வருவதால் அங்கு பதற்றம் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து உக்ரேனில் ரஷ்ய தாக்குதலைத் தாமதப்படுத்தும் முயற்சியில், ரஷ்ய படைகளை குழப்புவதற்காக அனைத்து வீதிகளிலும் உள்ள

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 28 பெப்ரவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.